# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.74/2023 நாள் : 26.09.2023**

**01.10.2023 முதல் சென்னை குடிநீர் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய குடிநீர் வரி மற்றும் கட்டணங்களை இ–சேவை மையங்கள் மற்றும் டிஜிட்டல்/காசோலை/வரைவோலைகளாக மட்டுமே செலுத்திட வேண்டும். ரொக்கமாக பெறப்பட மாட்டாது.**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

சென்னை குடிநீர் வாரியத்திற்கு நுகர்வோர்கள் செலுத்த வேண்டிய குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரி, குடிநீர் கட்டணங்கள், இணைப்புக் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்களை 01.10.2023 முதல் இ–சேவை மையங்கள் மற்றும் டிஜிட்டல்/காசோலை/ வரைவோலைகளாக மட்டுமே செலுத்திட வேண்டும். ரொக்கமாக பெறப்பட மாட்டாது. அனைத்து பகுதி அலுவலகங்களில் செயல்பட்டுவரும் வசூல் மையங்கள் வழக்கம் போல் இயங்கும். மேலும், பணிமனை அலுவலகங்களில் தற்போது செயல்பட்டுவரும் வசூல் மையங்கள் 01.10.2023 முதல் செயல்படாது. டிஜிட்டல் கட்டண முறையை ஊக்குவிப்பதற்காகவும், வரிசையில் காத்திருப்பதைத் தவிர்ப்பதற்காகவும் சென்னை குடிநீர் வாரியம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இந்நிலையில், சென்னை குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் வரி மற்றும் கட்டணங்களை காசோலை (Cheque) மற்றும் வரைவோலைகளாக (Demand Draft) செலுத்தும் நுகர்வோர்களின் வசதிக்காக அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் பணிமனை

அலுவலகங்களில் காசோலை / வரைவோலை பெறுவதற்கான பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், நுகர்வோர்கள், தங்கள் பகுதிகளில் உள்ள இ–சேவை மையங்களில் குடிநீர் வரி மற்றும் கட்டணங்களை செலுத்த சென்னை குடிநீர் வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நுகர்வோர்கள் சென்னை குடிநீர் வாரியத்தின் கட்டண நுழைவாயிலைப் (online Gate Way) பயன்படுத்தி கிரெடிட் கார்டு (Credit Card), டெபிட் கார்டு (Debit Card) மற்றும் நெட் பேங்கிங் (Net Banking) மூலமாக பணம் செலுத்தலாம். UPI, QR குறியீடு மற்றும் PoS போன்ற கட்டண முறைகளையும் பயன்படுத்தி நுகர்வோர்கள் தங்களின் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி, குடிநீர் கட்டணங்களை செலுத்தலாம்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,<br>
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்<br>
கழிவுநீரகற்று வாரியம்